தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
Tamil Study Centre, Homebush Inc.
Postal Address: P O Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au info@tsch.org.au

# அரையாண்டுப் பரீட்சை 2020

ஆண்டு: 9 திகதி: 20/06/2020

நேரம்: 2 ½ மணித்தியாலங்கள்

ஆசிரியர்: திரு.ச.தேவராசா

மாணவர் பெயர்: ____________________________________________

| **வினாக்கள்** | **வினா புள்ளி** | **பெற்ற புள்ளி** |
|---|---|---|
| வினா 1 | 15 | |
| வினா 2 | 15 | |
| வினா 3 | 15 | |
| வினா 4 | 15 | |
| வினா 5 | 20 | |
| வினா 6 | 20 | |
| **மொத்தப் புள்ளிகள்** | **100** | |

| வினா இல | 1 | புள்ளிகள் | 15 | பக்கம் | 2 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் சொற்களைப் பயன்படுத்தி ஆறு சொற்களுக்குக் குறையாத வாக்கியங்கள் எழுதுக.**

1. வணக்கம்

___________________________________________

___________________________________________

2. தமிழ்மொழி

___________________________________________

___________________________________________

3. அன்னை

___________________________________________

___________________________________________

4. பிதா

___________________________________________

___________________________________________

5. ஆசிரியர்

___________________________________________

___________________________________________

6. மலர்கள்

___________________________________________

___________________________________________

7. பாடசாலை

___________________________________________

___________________________________________

8. ஓடினேன்

9. பாடுகின்றாய்

10. வருவார்கள்

11. பறக்கும்

12. சிரித்தோம்

13. கொண்டாடுவார்கள்

14. எழுதுகின்றீர்கள்

15. வரைந்தேன்

| வினா இல | 2 | புள்ளிகள் | 15 | பக்கம் | 4 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் உரைப்பகுதியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

உலகத்தில் காலத்திற்குக் காலம் தொற்று நோய்க்கிருமிகள் உருவாகி மக்களுக்குத் துன்பத்தைக் கொடுக்கின்றன. பறவைகள் அல்லது மிருகங்களில் உருவாகிய கிருமி அவைகளிலிருந்து மனிதனுக்குத் தொற்றிப் பின்பு மனிதனிலிருந்து மனிதனுக்குத் தொற்றுகின்றன. இதனாலேயே அவற்றைத் தொற்றுநோய்கள் என்று கூறுகின்றோம். பறவைக் காய்ச்சல், பன்றிக் காய்ச்சல், எபோலா, சார்ஸ், கொரோனா போன்றவற்றை அதற்கு உதாரணங்களாகக் கூறலாம். இவை மக்களுக்கு இறப்பை ஏற்படுத்தக் கூடிய ஆபத்தான நோய்களாக விளங்குகின்றன. இவற்றில் இன்று உலகத்தை ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கின்ற கொரோனா மிகமிக ஆபத்தானதாக இருந்து கொண்டு ஆயிரக்கணக்கான மனித உயிர்களைப் பலிவாங்கிக் கொண்டிருக்கின்றது.

கொரோனாவின் பிறப்பிடம் சீனாவின் வூகான் நகரம். 2019 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் கொரோனாக் கிருமித் தொற்றுக்கு உள்ளாகிய முதல்நபர் வூகான் நகரத்தில் கண்டறியப்பட்டார். இதனாலேயே இதற்கு கோவிட்-19 என்று பெயரிடப்பட்டது. வூகான் நகரிலுள்ள நோய்க்கிருமிகள் பற்றி ஆராய்ச்சி செய்கின்ற ஆய்வு கூடங்களிலிருந்து கொரோனா நோய்க்கிருமி சீன மக்களுக்குப் பரவியதா? அல்லது சீன மக்களின் உணவுப் பழக்க வழக்கங்களினால் அதாவது பாம்பு, வெளவால் போன்றவற்றின் இறைச்சியை உண்டதானால் சீன மக்களுக்குப் பரவியதா? என்று சந்தேகங்கள் எழுப்பப்பட்டன. வூகான் ஆய்வுகூடங்களிலிருந்து பரவியதற்கு எந்தவிதமான ஆதாரங்களும் இல்லை என்று கொரோனாவைப் பெருந்தொற்று என்று பிரகடனம் செய்த உலக சுகாதார நிறுவனம் கூறியமை குறிப்பிடத்தக்கதாகும்.

சீனாவில் உருவாகிய கொரோனாக் கிருமி சீனாவிலிருந்து பிற நாடுகளுக்குச் சென்ற சீனமக்களிடமிருந்து மற்றவர்களுக்குத் தொற்றியும், பிறநாடுகளிலிருந்து சீனாவுக்குச் சென்ற பிறநாட்டவர்களுக்குத் தொற்றியும் 252 நாடுகளில் வேகமாகப் பரவியது. இந்த உரைப்பகுதியை எழுதுகின்ற போது (17.05.20) உலகம் முழுவதும் 4.7 மில்லியனுக்கு மேற்பட்ட மக்களுக்கு கொரோனாக் கிருமித் தொற்று ஏற்பட்டது. 312,000 க்கு மேற்பட்ட மக்கள் இறந்துள்ளனர். 1.8 மில்லியனுக்கு மேற்பட்ட மக்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு சுகம் அடைந்துள்ளார்கள். அமெரிக்காவில் மட்டும்

90,000 க்கு மேற்பட்ட மக்கள் இறந்துள்ளனர். பிறநாடுகளுடன் ஒப்பிடும் போது அவுஸ்திரேலியாவின் நிலைமை ஆறுதல் அளிக்கக் கூடியதாக உள்ளது. ஏனென்றால் இங்கு 7,000 க்கு மேற்பட்ட மக்களே கொரோனாக் கிருமித் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். 100 பேர்கள் இறந்துள்ளனர்.

கைகளைச் சவர்க்காரம் போட்டு அடிக்கடி நன்றாகக் கழுவுதல், முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளியை மேற்கொள்ளுதல், அத்தியாவசியமான தேவைகளுக்கு மட்டும் வெளியே செல்லுதல் போன்றன கொரோனாக் கிருமி தொற்றாமல் இருப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளாக உள்ளன. கொரோனாவுக்கான தடுப்பு ஊசி மருந்தைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் அமெரிக்கா, அவுஸ்திரேலியா, ஐக்கிய இராச்சியம், இஸ்ரேல், இத்தாலி, ஜேர்மனி போன்ற பலநாடுகள் ஈடுபட்டுள்ளன. தடுப்பூசி கண்டுபிடிக்கப்பட்டால் உலகம் முழுவதும் கொரோனாத் தொற்றிலிருந்து விடுபட்டு மக்கள் நிம்மதியாகவும், மகிழ்ச்சியாகவும் வாழ வழியேற்படும்.

1. தொற்று நோய்கள் என்றால் என்ன?
அவற்றிற்கு இரண்டு உதாரணங்கள் எழுதுக. (3 புள்ளிகள்)

______________________________________________

______________________________________________

______________________________________________

2. கொரோனா நோய்த்தொற்றுக்கு கோவிட்-19 என்ற பெயர் வந்தமைக்கான காரணம் என்ன? (3 புள்ளிகள்)

______________________________________________

______________________________________________

______________________________________________

3. கொரோனாக் கிருமியின் ஆரம்பப் பரம்பல் பற்றி எழுப்பப்பட்ட இரண்டு சந்தேகங்கள் எவை? (3 புள்ளிகள்)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

4. கொரோனாக் கிருமி தொற்றாமல் இருப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய 3 முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எவை?

(3 புள்ளிகள்)

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

5. கொரோனாப் பெருந்தொற்று உலகத்தில் உருவாகி அவுஸ்திரேலியாவிலும் பரவியமையால் உங்களுக்கு ஏற்பட்ட 3 பாதிப்புகள் எவை? (3 புள்ளிகள்)

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

| வினா இல | 3 | புள்ளிகள் | 15 | பக்கம் | 6 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் விடயத்தை 70 சொற்களுக்குக் குறையாமல் தொடர்ந்து எழுதி நிறைவு செய்க.**

எனது வீட்டிற்கு அருகாமையில் ஊஞ்சல், சறுக்கி போன்றவற்றைக் கொண்ட சிறுவர் பூங்கா ஒன்று உள்ளது. சிறுவயதில் அப்பா, அம்மாவுடன் அங்கே சென்று ஊஞ்சல் ஆடியும், சறுக்கியில் ஏறிச்சறுக்கியும் விளையாடி மகிழ்ந்தேன். ஆனால் வளர்ந்தவுடன் எனக்கு அவற்றில் ஆர்வம் இல்லாமல் போய்விட்டது. உடற்பயிற்சி செய்வது எல்லோருக்கும் அவசியமாகும். எனவே தினமும் மாலை 5 மணிக்கு பூங்காவுக்குச் சென்று பூங்காவைச் சுற்றி நான்கு தடவைகள் ஓடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தேன். வழக்கம் போல அன்றும் ஓடுவதற்காகச் சென்றேன். குளிராக இருந்தமையால் பூங்காவில் ஒருவரும் இல்லை. நான் முதலாவது சுற்று ஓடும்போது ஒரு வயோதிபப் பெண் மூலையில் வீழ்ந்து கிடப்பதைக் கண்டேன். ஐயோ கடவுளே அவர் இறந்துவிட்டாரா? என்று எண்ணினேன். தயக்கத்துடன் அவர்

அருகில் சென்றேன். அவரின் உடல் அசைவுகளிலிருந்து அவர் இறக்கவில்லை என்பதை அறிந்து நிம்மதிப் பெருமூச்சுவிட்டேன். அவர் அருகில் அவரின் கைப்பையும் விழுந்துகிடந்தது. அவரின் நெற்றியிலிருந்த பொட்டு, கைகளிலும், கழுத்திலும் இருந்த ஆபரணங்கள் என்பன தமிழராக இருப்பாரோ? என்ற வினாவை என்னுள்ளத்தில் ஏற்படுத்தின. என்ன செய்யலாம்? என்று யோசித்தேன்.............

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

| வினா இல | 4 | புள்ளிகள் | 15 | பக்கம் | 8 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் தனிவாக்கியங்களை ஒரு வினைமுற்றில் முடியக்கூடிய தொடர்வாக்கியமாக மாற்றி எழுதுக.**

1. எனது 13 ஆவது பிறந்தநாள் வந்தது.
2. சனிக்கிழமை அன்று பாடசாலை விடுமுறை நாளில் பிறந்தநாள் வந்ததால் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன்.
3. மாலையிலேயே கொண்டாட்டம் எனவே தமிழ்ப்பாடசாலைக்குச் செல்லவேண்டும் என்று அப்பா கூறினார்.
4. அம்மாவும் அதை ஆமோதித்தார்.
5. எனக்கும் அதுசரி என்று தோன்றியது.
6. தமிழ்ப் பாடசாலைக்குப் புத்தாடைகளை அணிந்து கொண்டு சென்றேன்.
7. ஆசிரியரும், நண்பர்களும் பிறந்தநாள் வாழ்த்துக் கூறினார்கள்.
8. தமிழ்ப்பாடங்களை ஆர்வத்துடன் கற்றேன்.
9. பி.ப. 1:30 மணிக்கு வீடுதிரும்பினேன்.
10. எனது பிறந்தநாள் என்பதனால் அம்மா விசேடமான உணவு வகைகளைச் சமைத்து வைத்திருந்தார்.
11. மகிழ்ச்சியுடன் வயிறு நிறையச் சாப்பிட்டேன்.
12. மாலை வேளையானதும் எனது உறவினர்களும், நண்பர்களும் வந்தார்கள்.
13. அம்மா சமைத்த சிற்றுண்டி வகைகளை அவர்களுக்குப் பரிமாறினேன்.
14. இரவு எட்டு மணிக்கு கேக் வெட்டினேன்.
15. எல்லோரும் இரவு உணவாக பிற்சாவை உண்டதுடன் எனது பிறந்தநாள் இனிதே நிறைவு பெற்றது.

| வினா இல | 5 | புள்ளிகள் | 20 | பக்கம் | 10 |
|---|---|---|---|---|---|

எதிர்வரும் டிசெம்பர் விடுமுறையில் இலங்கை அல்லது இந்தியாவில் வசிக்கின்ற உங்களின் சித்தப்பா, சித்தி, பிள்ளைகள் ஆகியோரைப் பார்த்துவிட்டு அவர்களுடன் ஒருமாத காலம் தங்கியிருக்க விரும்புகின்றீர்கள். அக்காலகட்டத்தில் அங்குள்ள சில இடங்களுக்குச் செல்லத் தீர்மானித்துள்ளீர்கள். அவற்றை 100 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கடிதமாக எழுதுக.

| வினா இல | 6 | புள்ளிகள் | 20 | பக்கம் | 11 |
|---|---|---|---|---|---|

**பின்வருவனவற்றில் ஒன்றைப்பற்றி 150 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை எழுதுக.**

1.

- மலர்கள் மகத்தானவை.
- மலர்களின் அழகில் மயங்காதவர்கள் எவரும் இருக்க முடியாது.
- மலர்களின் வாசனையும், அழகும் மனதுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கின்றன.

மேலே உள்ள தரவுகளை அடிப்படையாக வைத்து **மலர்கள்** என்ற தலையங்கத்தில் ஒரு கட்டுரை.

2. நீங்கள் பார்த்து மகிழ்ந்த ஒரு திருமண வைபவம்

3.

- வாசிப்பதனால் மனிதன் பூரணம் அடைகின்றான்.
- நூலகங்கள் மக்கள் பயனுள்ள வகையில் பொழுதைக் கழிக்க உதவுகின்றன.
- நூலகங்கள் மாணவர்களுக்கும், ஏனையவர்களுக்கும் அறிவை வளர்க்க உதவுகின்றன.

மேலே உள்ள தரவுகளை அடிப்படையாக வைத்து **நூலகங்கள்** என்ற தலையங்கத்தில் ஒரு கட்டுரை.

___________________________________________

___________________________________________

___________________________________________

___________________________________________

___________________________________________

___________________________________________

___________________________________________

___________________________________________

___________________________________________

___________________________________________

___________________________________________